


நியூ பாரத் பதின்ம மேல்நிலைப் பள்ளி - திருவாரூர்
மேல் பாலர்
நீதிக்கதைகள்
Adobe Stock | #580904999

# 1. ஆட்டுக்குட்டியின் தந்திரம்



ஒரு காட்டில் ஒரு நரி மிகவும் பசியோடு இருந்தது. அது இரை தேடி அலைந்தது.




அப்போது , நரி செல்ல முடியாத ஒரு மேட்டுப் பகுதியில் ஒரு ஆட்டுக்குட்டி மேய்ந்து கொண்டிருந்ததை நரி பார்த்தது. நரி ஆட்டுக்குட்டியை சாப்பிட திட்டம் போட்டது. அதற்காக, ஒரு தந்திரம் போட்டது.




ஆட்டுக்குட்டியை பார்த்து , நீ ஒரு நல்ல செய்தியை கேள்விப்பட்டாயா? பூமியில் வாழும் அனைத்து உயிரினங்களுக்கும் ஒரு சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. இனி ஒருவரை ஒருவர் அடித்துச் சாப்பிடக் கூடாது என்ற உடன்பாடு ஏற்பட்டுள்ளது என்றது.




ஆட்டுக்குட்டியைப் பார்த்து “நான் உன்னை ஒன்றும் செய்யமாட்டேன் இறங்கி வா என்றது நரி .




அந்த ஆட்டுக்குட்டி மிகவும் புத்திசாலி . நரியின் தந்திரத்தைப் புரிந்து கொண்டு அதை பயமுறுத்த நினைத்தது.



ஆட்டுக்குட்டி எதையோ பார்ப்பதைப் போல் தலையைத் தூக்கி பார்த்தது. “ஆட்டுக்குட்டியே! என்ன பார்க்கிறாய்” என்று கேட்டது நரி. அதற்கு ஆட்டுக்குட்டி “தூரத்தில் சில ஓநாய்கள் வருவது மாதிரி தெரிகிறது என்றது.




நரிக்கு  உடல் நடுங்கியது. “ சரி சரி நான் பிறகு வந்து உன்னிடம் பேசுகிறேன்” என்று கூறி ஓடியது. “நரி அண்ணே போகாதே! ஓநாய்களைக் கண்டு ஏன் பயப்படுகிறாய்? நீதானே சொன்னாய் உயிரினங்களுக்கிடையே சமாதானம் ஏற்பட்டுள்ளது . என்று அது ஓநாய்களுக்கு தெரியாமல் இருந்தால், என் கதி என்ன ஆவது? நான் போகிறேன்” என்றது நரி.




நரி ஆட்டுக்குட்டியை ஏமாற்ற பார்த்தது . ஆட்டுக்குட்டி நரியை ஏமாற்றி விட்டது.

**நீதி:**




**"நம் தேவைக்காக பிறரை ஏமாற்ற நினைத்தால் அதுவே , நமக்கு ஏமாற்றத்தைத் தரும்".**


## 2. ஆப்பசைத்த குரங்கு




**ஒரு காட்டில் ஒரு குரங்கு இருந்தது. குரங்கு என்றாலே குறும்புத்தனம் உடையது. இந்த குரங்கு மிகவும் குறும்புடையது.**



அந்த குரங்கு காட்டில் ஒரு விறகுவெட்டி தினமும் விறகுக்காக மரங்களை வெட்டுவதைப் பார்த்து வந்தது.அவர்கள் மரத்துண்டுகளைச் சுலபமாக வெட்டுவதற்கு ஆப்புகளை பயன்படுத்துவார்கள்.



வழக்கம்போல் விறகுவெட்டி ஒரு பெரிய மரத்துண்டை பிளக்க ஆரம்பித்தான். அவனுக்கு களைப்பு வந்ததால் மரத்தின் பாதியளவில் ஆப்பை வைத்து விட்டுச் சென்றான்.



குரங்கு அவன் சென்றவுடன் மரத்திலிருந்து கீழே இறங்கி வந்தது.



மரத்தில் விறகுவெட்டி விட்டுச்சென்ற ஆப்பை அசைத்தது. குரங்கு ஆப்பை இழுக்கும் கவனத்தில் தனது வால் மரத்துண்டில் மாட்டியிருப்பதைக் கவனிக்கவில்லை. உடனே, மரத்துண்டு சுருங்கி விட்டது . வால் நசுங்க, குரங்கு அலறியது.



**சத்தம் கேட்டு விறகு வெட்டி ஓடி வந்து குரங்கிற்கு உதவி செய்தான்.**

## நீதி:



**" ஆபத்தில் இருக்கும் அனைவருக்கும் நாம் உதவி செய்ய வேண்டும்"**

# 3. நரியின் தந்திரம்




ஒரு காட்டில் எங்கிருந்தோ சிங்கத்தின் கர்ஜனை ஒன்று கேட்டது. அப்போது அவ்வழியாகச் சென்று கொண்டிருந்த சுற்றுலாப் பயணி ஒருவன்,



சத்தத்தைக் கேட்டதும் ஓடத் தொடங்கினான்." மனிதா பயப்படாதே!இங்கே வா நான் உன்னை ஒன்றும் செய்ய மாட்டேன்" என்ற குரல் ஒலித்தது.



அங்கு ஒரு கூண்டில் சிங்கம் ஒன்று அடைபட்டு இருந்தது.



மனிதனைப் பார்த்த சிங்கம் , “மனிதனே, என்னை இந்தக் கூண்டிலிருந்து விடுவித்து விடு . நான் உனக்கு பல உதவிகளைச் செய்வேன்” என்றது. சிங்கத்தின் வார்த்தையை நம்பி கூண்டின் கதவைத் திறந்தான்.



அக்கூண்டைத் திறந்தவுடன் சிங்கம் உடனே அந்த மனிதன் மீது பாய்ந்தது. “சிங்கமே! நீ செய்வது உனக்கே நியாயமாக இருக்கிறதா? உன் பேச்சை நம்பி கூண்டிலிருந்து விடுவித்தேன் அதற்கு இதுதானா கைமாறு, என்று கேட்டான்.”




அதற்கு சிங்கம் “என் உயிரை காத்துக் கொள்வதற்காக நான் ஆயிரம் பொய் சொல்லுவேன் . அதை நீ எவ்வாறு நம்பலாம்? மனிதர்கள் என்றால் பகுத்தறிவுள்ளவர்கள் தானே அந்த அறிவைக் கொண்டு இது நல்லது, இது கெட்டது என்று பகுத்தறிய வேண்டாமா? முட்டாள்தனமான உன் செய்கைக்கு நான் எப்படி பொறுப்பாக முடியும்” என்றது சிங்கம்.



அவ்வழியாக ஒரு நரி ஒன்று வந்தது . அப்போது அம்மனிதன் நடந்த கதையனைத்தையும் நரியிடம் கூறினான்.அதற்கு சிங்கம் “எங்கள் தொழில் அனைவரையும் அடித்துக் கொன்று சாப்பிடுவதுதான். இது இவனுக்கு நன்றாக தெரிந்தும் கூட என்னை கூண்டிலிருந்து விடுவித்தான். இவனது முட்டாள் தனத்திற்கு நான் எப்படி பொறுப்பாவது . என்று நரியிடம் கேட்டது.



அனைத்தையும் கேட்ட நரி ஒன்றும் புரியாததைப் போல் பாவனை செய்தது. “நீங்கள் சொல்வது எனக்கு புரியவில்லை தொடக்கத்திலிருந்து செய்கை மூலம் செய்து காட்டுங்கள்” என்று சிங்கத்திடம் நரி கூறியது.




**நரி சொன்னபடி சிங்கம் செய்து காட்டியது. சிங்கம் கூண்டிற்குள் சென்றவுடன் நரி சட்டென்று கூண்டின் கதவை இழுத்து மூடியது. நரி சிங்கத்தை ஏமாற்றியது.**




**சிங்கம் திரும்பவும் கூண்டிற்குள் அடைபட்டது.**

**நீதி:**




**“ஆறு அறிவு உள்ள மனிதர்கள் கூட சில இடங்களில் சிந்தித்து செயல்பட வேண்டும்”**


## 4. வடையும் நரியும்




**ஓர் ஊரில் ஒரு காகம் ஒன்று இருந்தது. அது எங்கிருந்தோ வடை ஒன்றை ஏமாற்றி தூக்கிக் கொண்டு வந்தது.**



**அவ்வழியாக , ஒரு நரி வந்தது . காகத்திடம் வடையை பறிப்பதற்காக ஏதேதோ சொன்னது.**



**நரி , உடனே காகத்திடம் “காகமே ! உன் குரல் மிகவும் இனிமையாக உள்ளது. எனக்காக ஒரு பாட்டு பாடேன் என்றது.**



நரி சொன்னவுடன் , காகம் பாட்டுப்பாட வடையோ கீழே விழுந்தது.



முட்டாள் காகம் ஏமாந்தது.




நரியும் வடையைத் தூக்கிச் சென்றது.

**நீதி:**




**"ஏமாற்றிய காகம் ஏமாந்தது**
**ஏக்கம் பிடித்து நின்றது".**


# 5. நரியும் ஆடும்



ஒரு நாள் ஒரு காட்டில் வயதான நரி ஒன்று இரைதேடி அலைந்தது. அதற்கு இரை எதுவும் கிடைக்காததால் சோர்வுற்று வழியில் இருந்த கிணற்றில் தடுமாறி விழுந்தது.




அந்த கிணறு மிகவும் ஆழமாக இருந்ததால் நரியால் வெளியே வர முடியவில்லை.




அந்த வழியாக ஆடு ஒன்று வந்தது. நரியைப் பார்த்து , நரியாரே! கிணற்றுக்குள் என்ன செய்கிறீர்கள் என்று கேட்டது ஆடு.



இல்லை, இங்கு உள்ள புற்கள் மிகவும் சுவையாக உள்ளது. அதனால்தான் சாப்பிடுகிறேன். ஆடு உடனே நானும் வந்து சாப்பிடலாமா? என்றது.



நரி , ம்ம்ம்.... சேர்ந்தே சாப்பிடலாமே உள்ளே இறங்கி வா என்றது.



ஆடு தாவி உள்ளே குதித்தது . ஆடு ஏமாந்த சமயம் பார்த்து நரி,



ஆடு தலையில் கால் வைத்து நரி ஏறிதப்பிச் சென்றது. ஆடு அதன் அறியாமையை நினைத்து வருந்தியது.

## நீதி:



“நமக்குத் தெரியாத நபர்களுடன் நாம் பார்த்துப் பழக வேண்டும் . இல்லையெனில் , அதுவே நமக்கு ஆபத்தாக நேரிடும்”.

# 6. எலியின் நண்பன் சிங்கம்



ஒரு காட்டில் பயங்கரமான சிங்கம் வாழ்ந்தது. அந்த காட்டிற்கு சிங்கம்தான் ராஜா. ஒருநாள் சிங்க ராஜா தூங்கிக் கொண்டிருந்தபோது ஒரு குட்டி எலி அங்கு வந்தது.




எலி சிங்கத்தைத் தாண்டி போகும்போது திடீரென்று சிங்கம் முழிக்க "டக்குனு" எலியின் வாலை பிடித்தது.




ஆகா! உணவு என்னைத் தேடி வந்துவிட்டதே என்றது சிங்கம். உடனே, எலி என்னை சாப்பிட்டு விடாதீர்கள் நான் உங்களுக்கு பயன் உள்ளவனாக கூட இருக்கலாம் என எலி சொல்ல சிங்கமும் இரக்கம் கொண்டது. எலி நன்றி சொல்லிவிட்டு கிளம்பியது.



ஒருநாள் சிங்க ராஜா இரைதேடி காட்டிற்குச் செல்ல வேட்டைக்காரன் ஒருவன் சிங்கம் மீது வலையை வீசினான். அப்போது சிங்கம் கர்ஜித்தது.



**சிங்கத்தின் குரலைக்கேட்ட எலி அடடே! இது நம் சிங்க ராஜா குரல் போல் உள்ளதே ராஜா ஏதோ ஒரு ஆபத்தில் இருக்கிறார் போல என்று உடனே எலி தனது நண்பர்களை அழைத்துச் சென்று அந்த வலைகளை கடித்தன. ராஜாவை ஆபத்தில் இருந்து காப்பாற்றின.**



**அன்றிலிருந்து சிங்கமும் எலியும் நல்ல நண்பர்கள் ஆகின.**

நீதி:




"ஆபத்தில் உதவுபவனே நல்ல நண்பன்"

## 7.ஓநாய் என்று கூவிய சிறுவன்



முன்னொரு சமயம் ஒரு ஆடு மேய்க்கும் சிறுவன் தன் கிராமத்தில் உள்ள ஆடுகளை மேய்த்து வந்தான்.ஒவ்வொரு நாளும் அவன் ஆட்டு மந்தையை ஒரு குன்றின்மேல் கூட்டிச்சென்று புல் மேய விட்டு மாலையில் கீழே கூட்டி வருவான்.



ஆனால், ஒருநாள் சலித்து போன அவன். எனக்கு சலிப்பாக இருக்கிறது. நான் இங்கு தனியாக ஆடுகளை மேய்த்து வருகிறேன். பேசுவதற்குக் கூட ஒருவரும் இல்லை. நான் என்ன செய்வது?



திடீரென, அவனுக்கு ஒரு மோசமான யோசனை தோன்றியது. அவன் குன்றின் ஓரத்தில் நின்று கொண்டு உரக்கக் கூவினான். காப்பாற்றுங்கள்! காப்பாற்றுங்கள்! ஓநாய்ஒன்று வருகிறது. அது ஆடுகளை எல்லாம் தின்றுவிடும்.



அச்சிறுவன் கூறுவதை நம்பி அக்கிராம மக்கள் ஓடி வந்து பார்த்தார்கள். அங்கு ஓநாயே இல்லை. மறுநாள், அதேப்போல் கூவினான். அக்கிராம மக்களும் வந்து பார்த்தார்கள். மறுபடியும் அச்சிறுவன் அவர்களை ஏமாற்றினான்.



அவர்கள் கோபமடைந்தார்கள் நீ செய்வது சரியில்லை. இதற்காக ஒருநாள் நீ வருத்தபடுவாய்.



மறுநாள், ஆடு மேய்த்து கொண்டிருந்தபோது, உண்மையாகவே அவ்விடத்திற்கு ஓநாய் ஒன்று வந்தது. அவன் கிராம மக்களை கூப்பிட்டான். ஆனால், யாரும் அங்கு வரவில்லை. ஓநாய் ஆடுகளைக் கொன்று தின்றது.

நீதி:



"ஏமாற்றுபவன் ஏமாற்றப்படுவான்"

# 8. தங்க முட்டையிடும் வாத்து



ஒரு விவசாயி தனது மனைவி மற்றும் குடும்பத்துடன் ஒரு கிராமத்தில் வசித்து வந்தார். அவரிடம் தங்க முட்டையிடும் ஒரு வாத்து இருந்தது. தினமும் அந்த வாத்து ஒரு தங்க முட்டை அளிக்கும்.



அதை விற்று விவசாயி தினசரி வாழ்க்கையை நடத்தி வந்தார். திடீரென ஒருநாள் வாத்தின் வயிற்றில் இருக்கும் அனைத்து முட்டைகளையும், ஒரே நாளில் எடுத்து விற்றுவிட்டால் அதிக பணம் கிடைக்கும் என்று சிந்தித்த விவசாயி , அதனை தனது மனைவியிடம் கூறினான்.



அவன் மனைவியும் கொஞ்சம் கூட யோசித்துப் பார்க்காமல், சரி என்று கூற, அச்சமயமே அவர்கள் வாத்தினை அறுத்து அதிலிருந்து தங்க முட்டைகளை எடுக்க முயன்றனர். ஆனால் தங்கமுட்டைகளுக்குப் பதிலாக வாத்தின் உடலில் இருந்து இரத்தமே வெளிப்பட்டது.



தம்பதியர் பெரும் ஏமாற்றம் அடைந்ததுடன் தங்களுக்கு இத்தனை நாள் சோறு போட்டுக்கொண்டிருந்த பெரும் மூலதனத்தையும் இழந்து தவித்தனர்.

**நீதி:**



**“பேராசை பெருநஷ்டம்”**

**மேலாண்மைக்குழு உறுப்பினர்கள்:**

திரு. கோ. நாகராஜன் B.A., (நிறுவனர்)

திருமதி நா. பிரகதாம்பாள்., B.A., (தாளாளர்)

Rtn. Dr. நா. முரளிதரன், M.A.,M.Phil,B.Ed., D.Litt(USA), (முதல்வர்)

திருமதி. Dr.சு. அருணா முரளிதரன், M.Sc.,B.Ed.,M.Phil,
(துணை முதல்வர்)

**நிர்வாகக்குழு உறுப்பினர்கள்**

நல்லாசிரியர் திருமதி இரா. கமலா., B.A., B.Ed .,(துணை முதல்வர்)

நல்லாசிரியர் திருமதி ந. விஜயலெட்சுமி, M.A.,B.Ed.,(துணை முதல்வர்)

திருமதி. ஸ்ரீ. புவனேஸ்வரி, B.A., B.Ed .,(துணை முதல்வர்)

நல்லாசிரியர் திரு.அ. ராஜதுரை, M.Sc., M.Phil, B.Ed.,
(ஒருங்கிணைப்பாளர்)

திருமதி.வெ. கவிதா, M.Sc., B.Ed., (ஒருங்கிணைப்பாளர்)

**முதல் பதிப்பு: May - 2025**

**வடிவமைப்பு**

திருமதி. ந. இராதிகா, B.Lit., DCA.,DOA

செல்வி. S.அட்சயா, M.Sc.,

**அச்சுரிமை:**

நியூ பாரத் பதின்ம மேல்நிலைப் பள்ளி, திருவாரூர்.

NOTES